**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.</u>**
**முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.**
**2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**<u>Crl.M.P.No. 531 of 2026 in Crl.M.P.No. 401 of 2026</u>**

திரு.கருப்பசாமி (வயது 41/2026),
த/பெ.செல்வராஜ்,
167, கிழக்குத்தெரு,
கே.மடத்துப்பட்டி,
வெம்பக்கோட்டை. ...மனுதாரர்/வாகன உரிமையாளர்

/ இடையே/

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர் ,
சாத்தூர் நகர் காவல் நிலையம்,
விருதுநகர் மாவட்டம்.
குற்ற எண்.210/2026 ... புகார்தாரர் /குற்றமுறையீட்டாளர்

மனுதாரர் வழக்கறிஞர் : திரு.L.முரளி, B.Com., B.L.,
அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2

**<u>உத்தரவு</u>**

1. சாத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.210/2026 சட்டப்பிரிவு 196(2), 353(2) BNS மற்றும் 4 (1) of TNP Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 67 BQ 3651 என்ற பதிவெண் கொண்ட Honda Duo இருசக்கர வாகனம் PR.NO. 136/2026 பிரகாரம் 05.05.2026 ம் தேதி பெற்று காவல் நிலை பாதுகாப்பில் இருந்து வருகிறது என்றும், அதனை தன் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி BNSS பிரிவுகள் 497/503–ன் கீழ் மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி இருசக்கர வாகனம் காவல் நிலைய பாதுகாப்பில் இருக்கும் பட்சத்தில், வாகனத்தின் இன்ஜின் மற்றும் இயந்திரப் பொருட்கள் ஓடும் நிலையில் இல்லாது சேதமடைந்து இயங்காமல் போய்விடும் என்றும், அந்த இருசக்கர வாகனத்தின் மதிப்பு குறைய வாய்ப்பு உள்ளது என்றும் அதனை தன்னிடம் திருப்பி வழங்கும் பட்சத்தில் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவிற்கு கட்டுபடுவதாகவும், வாகனத்தை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் நல்லமுறையில் பாதுகாப்பார் என்றும், வாகனத்தை விற்கவோ, அடமானம் செய்யவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், எவ்வித குற்றச்செயலிலும் ஈடுபடுத்தமாட்டார் என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் ஆஜர்படுத்துவதாகவும் கூறி, அதை இடைக்கால பராமரிப்புக்காக மனுதாரரிடம் ஒப்படைக்க மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில், இரு சக்கர வாகனத்தை மனுதாரரிடம் கொடுத்தால் வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்தினை சரியாக ஆஜர்படுத்த மாட்டார் என்றும், மேலும் வழக்கு சொத்தினை நிறம் மாற்றிவிடுவார் என்றும் கூறி, இருசக்கர வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டது.

4. இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும்

S
VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.12 18:16:38 +0530

நன்கு பரிசீலனை செய்தது.

5. சாத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.210/2026 சட்டப்பிரிவு 196(2), 353(2) BNS மற்றும் 4 (1) of TNOPPD Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 67 BQ 3651 என்ற பதிவெண் கொண்ட Honda Duo இருசக்கர வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது என்பது மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரம், வாகனத்தின் பதிவு சான்று மற்றும் வழக்கு ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. இந்த இருசக்கர வாகனத்திற்கு இன்றுவரை வேறுயாரும் உரிமை கோரவில்லை.

6. எனவே, Sundara Bai Ambalal Desai –Vs– State of Gujarat 2003 SCC Crl. 1943 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படியும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரர் வசம் திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் மனுதாரர் தக்க பிணையதாரர்களை ஆஜர்படுத்த தயாராக இருப்பதாக கூறியதைக் கருத்தில் கொண்டும், பயன்படுத்தாமல் இருந்தால் இருசக்கர வாகனம் பயனற்றுபோய்விடும் என்பதாலும், மனுதாரருக்கு தக்க நிபந்தனையின் பேரில் வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக திருப்பிக் கொடுப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்சொன்ன வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>:–

1. மனுதாரர்/உரிமையாளர் ரூபாய்.50,000/–க்கு இரண்டு பிணையதாரர்களுடன் பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்/உரிமையாளர், வழக்கு சொத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது.
3. இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் முன்னிலையில் வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து அதற்கு சாட்சிய சட்டம் படி சான்று மற்றும் பஞ்சநாமா தயார் செய்து அவற்றை வழக்கு கோப்பில் இணைக்க வேண்டும்.
4. வழக்கு விசாரணையின் போது மனுதாரர் வழக்கிடை சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இந்த உத்தரவு, என்னால் இன்று 12.06.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.12 18:16:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
சாத்தூர்

<u>Visit ecourts.gov.in for updates or download mobile app "eCourts Services" from Android or iOS</u>